FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8319457

1. District மாவட்டம் திருப்பூர் | PS காவல்நிலையம் மே.த.க. பிரிவு | Year ஆண்டு 2026 | FIR No முதஅ எண் 13/2026/AC/TPR | Date நாள் 31.08.2026

2. (i) Act சட்டம் The Prevention of Corruption | Sections பிரிவுகள் 7(a) & (b)
(ii) Act சட்டம் (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்
(iii) Act சட்டம் | Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் 25.8.26 | Date to நாள் வரை 26.8.26
Time Period நேர அளவு | Time from நேரம் முதல் 16.30 மணிக்கு | Time to நேரம் வரை 11.00 மணிக்கு
(b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.8.2026 | Time நேரம் 16.00 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D. Vol. II | Time நேரம் 16.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 44 கி.மீ. தென்கிழக்கு

Beat Number : — முறைக் காவல் எண்
(b) Address : கிராம நிர்வாக அலுவலகம், வீரகோழுபுரம், வெள்ளக்கோவில், திருப்பூர் மாவட்டம். முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. ராமசாமி
குற்றமுறையிட்டாள்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : கிப்பணநாடார்
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : — நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : இந்தியன் நாட்டினம்
(e) Passport No. : — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — வழங்கப்பட்ட நாள்
Place of Issue : — வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : — தொழில்
(g) Address : கதவு எண். 4/37, விநாயகர் கோயில் வீதி, மாதப்பூர், பொங்கலூர், திருப்பூர் மாவட்டம். முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. அருண்குமார், கிராம நிர்வாக அலுவலர், வீரகோழுபுரம், வெள்ளக்கோவில், திருப்பூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — —

11 Inquest Report / Un-natural death Case No. if any :
பின விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Ramasamy 31/8/26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

K. Ramasamy 31/8/26
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court. 31.08.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

Name பெயர் பி. கீதாலட்சுமி
Rank நிலை ..... No. எண் .....
காவல் ஆய்வாளர்
உ.தா.க.பிரிவு, திருப்பூர் மாவட்டம்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.**13/2026/AC/TPR** வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் B.கீதாலட்சுமி ஆகிய நான் 31.08.2026-ம் தேதி மாலை 16.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு.K.ராமசாமி, த/பெ.குப்பணநாடார், கதவு எண். 4/37, விநாயகர் கோயில் வீதி, மாதப்பூர், பொங்கலூர், திருப்பூர் மாவட்டம் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர், K.ராமசாமி, த/பெ.குப்பணநாடார், கதவு எண். 4/37, விநாயகர் கோயில் வீதி, மாதப்பூர், பொங்கலூர், திருப்பூர் மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ஐயா, நான் பொங்கலூர், மாதப்பூர், விநாயகர் கோயில் வீதியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் பல்லடத்தில் உள்ள நரேந்திரா டெக்ஸ்டைல்ஸ் மில்லில் 35 ஆண்டுகளாக மேஸ்திரி வேலை செய்து கடந்த 2007ம் ஆண்டு பணி ஓய்வு பெற்று தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். என்னுடன் பிறந்த தம்பி சண்முகம் ஆவார். எங்களுக்கு வெள்ளக்கோயில், வீரசோழபுரம் கிராமத்தில் க.ச.எண்கள் 278 மற்றும் 295ல் முறையே 2.12 3/4 ஏக்கர் மற்றும் 3.39 ஏக்கர் விவசாய பூமி தனித்தனியாக உள்ளது. அந்த பூமியை எங்கள் அப்பா குப்பணநாடார் கடந்த 05.10.1993ம் தேதி எனக்கும் எனது தம்பி சண்முகத்திற்கும் காங்கயம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மதிப்பிடப்படாத உயில் சாசனம் பத்திர எண் 97/1993 ஆக பதிவு செய்து வைத்துள்ளார். எங்களது 2.12 3/4 ஏக்கர் மற்றும் 3.39 ஏக்கர் பூமிக்கு அருகில் எங்களது பங்காளிகள் பூமி சுமார் 12 ஏக்கரும் உள்ளது. சுமார் 9 மாதங்களுக்கு முன்பு எங்கள் பங்காளிகள் அனைவரும் சேர்ந்து அவர்களது 12 ஏக்கர் பூமிக்கு தனிப்பட்டா செய்து கொள்ள வேண்டி எங்கள் தோட்டத்திற்கு அருகில் வசித்து வரும் ராசப்பா நாடார் மகன் பாலசுப்பிரமணியம் என்பவரிடம் பொறுப்பை ஒப்படைத்திருந்தனர். அதன்பின்னர் பாலசுப்பிரமணியம்

வீரசோழபுரம் மணியகாரர் அருண்குமார் என்பவரை அழைத்து வந்து பூமியை காண்பித்தார். அதன்பின்னர் மணியகாரர் அருண்குமார் ஒரு சர்வேயரை அழைத்து வந்து எங்களது பங்காளிகள் பூமியுடன் சேர்த்து எங்களது பூமியையும் அளந்து முடித்து பின்னர் FMB வரைபடம் வரைந்து கொடுத்தார். மேலும் தனி பட்டா செய்து தர தனக்கு தனியாக பணம் கொடுக்க வேண்டும் என்று மணியகாரர் அருண்குமார் சொன்னார். நானும், எனது தம்பியும் பணம் கொடுக்காததால் மணியகாரர் அருண்குமார் எங்களுக்கு தனிபட்டா செய்து தரவில்லை. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு எங்களுக்கு பாத்தியப்பட்ட க.ச.எண். 278ல் உள்ள 2.12 3/4 ஏக்கர் காட்டை நானும் எனது தம்பியும் எங்கள் அவசர தேவைக்காக விற்பனை செய்ய முடிவு செய்து இட புரோக்கரிடம் தகவல் சொல்லியிருந்தோம். அதன்பேரில் எங்கள் பூமியை பலர் வந்து பார்த்து சென்றார்கள். பூமியை வாங்க வருபவர்கள் தனி பட்டா வேண்டும் என்று கேட்டதால் நானும் எனது தம்பியும் மணியகாரர் அருண்குமாரை ஜூலை மாத கடைசி வாரத்தில் ஒரு நாள் அவரது அலுவலகத்திற்கு சென்று காலை சுமார் 11.00 மணியளவில் சந்தித்து எங்கள் பூமிக்கு தனி பட்டா வேண்டும் என்று கேட்டோம். அதற்கு அவர் தான் ஏற்கனவே கூறியவாறு தனக்கு தனியாக பணம் வேண்டும் என்று கேட்டார். அதற்கு நாங்கள் எங்களுக்கும் பணத்தேவை இருப்பதால் தான் எங்களது பூமியை விற்பனை செய்ய தனி பட்டா கேட்பதாக சொன்னோம். அப்போது அவர் பூமியை விற்ற பிறகு தனக்கு தனியாக கண்டிப்பாக பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நாங்களும் பூமியை விற்பனை செய்த பின்னர் பார்க்கலாம் என்று கூறினோம். அதன் பின்னர் மணியகாரர் அருண்குமார் நில பத்திரத்தின் நகலையும், இரண்டு சர்வே எண்களுக்கான FMB வரைபடங்களின் நகல்களையும் கொடுங்கள் என்று கேட்டு பெற்றுக் கொண்டார். மேலும் அவரே உட்பிரிவு மற்றும் பட்டா மாறுதலுக்கான விண்ணப்பத்தை செய்து கொள்வதாக கூறினார். அதன்பின்னர் கடந்த 28.07.2026ம் தேதி அன்று கீழ்கண்டவாறு எனது செல்போன் எண்ணுக்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது. அதில் விண்ணப்ப எண். 2026/0105/32/033704 பெறப்பட்டது, இதற்கான சேவை கட்டணமாக ரூ.460/- மட்டும் பெறப்பட்டது, இந்த பட்டா மாறுதல் மனு தொடர்பாக புல விசாரணைக்கு வருவாய் துறை அலுவலர்களால் (கிராம நிர்வாக அலுவலர்/நில

அளவர்) தங்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும் என்று குறுந்தகவல் வந்திருந்தது. பின்னர் சுமார் 20 நாட்கள் கழித்து மணியக்காரர் அருண்குமார் புதிதாக சர்வேயர் என்று சொல்லி ஒருவரை அழைத்து வந்தார். இருவரும் எங்களது இரண்டு இடத்திலும் உள்ள பூமியை பார்த்து விட்டு சென்றுவிட்டார்கள். பின்னர் கடந்த 23.08.2026ம் தேதியன்று 2.12 3/4 ஏக்கர் பூமிக்கு எனது பெயரில் பட்டா எண். 5262ன்படி தனி பட்டாவும், எனது தம்பி பெயரில் பட்டா எண். 5261ன்படி தனிபட்டாவும் முறையே ஒவ்வொருவருக்கும் 0.41.50 ஏர் பூமிக்கு கிடைத்தது. எங்களுக்கு சொந்தமான 3.39 ஏக்கர் மற்றொரு பூமிக்கு தனிபட்டா கிடைக்கவில்லை. எனவே நான் கடந்த 25.08.2026ம் தேதியன்று மாலை சுமார் 3 மணியளவில் வீரசோழபுரம் மணியகாரர் அலுவலகம் சென்றிருந்தேன். அங்கு மணியகாரர் அருண்குமார் இல்லாததால் அவரை எனது செல்போனில் இருந்து ஏற்கனவே எனது செல்போனிலிருந்த அவரது நம்பருக்கு தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது அவர் வெளியில் இருப்பதாகவும், அதனால் என்னை மணியகாரர் அலுவலகத்திலேயே இருக்குமாறு கூறினார். சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் நான் அங்கு காத்திருந்தும் அவர் வராததால் மாலை சுமார் 4.30 மணியளவில் மீண்டும் அவரை செல்போனிலிருந்து தொடர்பு கொண்டு எனது 3.39 ஏக்கர் பூமிக்கு பட்டா வேண்டும் என்று கேட்டேன். அப்போது அவர் ஏற்கனவே செய்து கொடுத்த வேலைக்கு தனக்கு தனியாக பணம் கொடுக்கவில்லை, அதனால் அதற்கு பணம் கொடுத்தால் தான் மற்றொரு பூமிக்கு பட்டா மாறுதல் செய்து தர முடியும் என்று கூறினார். அதற்கு நான் பணம் இல்லாததால் தான் எங்களது பூமியை விற்பனை செய்வதற்காக பட்டா மாறுதல் கேட்கிறேன் என்றும், பார்த்து செய்யுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் தான் ஏற்கனவே 2.12 3/4 ஏக்கர் பூமிக்கு பட்டா வாங்கி கொடுத்ததற்கும், மேற்கொண்டு 3.39 ஏக்கர் பூமிக்கு தனிபட்டா வழங்க ஏற்பாடு செய்வதற்கும் தனக்கு தனியாக ரூ.40,000/- கொடுத்தால் தான், தனி பட்டாவிற்கு விண்ணப்பித்து பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்றும் தன்னை மீறி அந்த 3.39 ஏக்கர் பூமிக்கு தனி பட்டா கிடைக்காது என்றும் கூறி போனை வைத்துவிட்டார். அதன்பின்னர் அடுத்த நாள் 26.08.2026ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நானும் எனது தம்பி சண்முகமும் வீரசோழபுரம் மணியகாரர் அலுவலகம் சென்று மணியகாரர்

அருண்குமாரை பார்த்தோம். அப்போது அவர் தான் ஏற்கனவே கேட்டவாறு பணம் கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். நான் எனது செலவுக்காக ரூ.10,000/- வைத்திருப்பதாக கூறினேன். அதற்கு அவர் அந்த பணத்தை கொடுக்குமாறு கட்டாயபடுத்தி வாங்கி கொண்டார். அப்போது என்னால் மீதி பணம் ரூ.30,000/-த்தை உடனடியாக ரெடி செய்ய முடியாது என்றும் திங்கள் கிழமைக்கு மேல் ஆகிவிடும் என்றும் மணியகாரர் அருண்குமாரிடம் கூறினேன். அதற்கு அவர் வரும் திங்கள் கிழமைக்கு மேல் பணம் ரெடியான பின்பு தனது செல்போனில் தொடர்பு கொண்டு பேசிவிட்டு முதலில் ரூ.20,000/-யை கொண்டு வந்து கொடுத்து விடுங்கள் என்றும், அப்போதுதான் தனி பட்டா கிடைக்க ஆன்லைனில் விண்ணப்பிப்பேன் என்றும் கூறினார். மேலும் தனிபட்டா கிடைத்தவுடன் மீதி பணம் ரூ.10,000/-த்தை கொடுத்துவிட வேண்டும் என்றும் கறாராக கூறினார். நாங்களும் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டோம். எனக்கு பணம் கொடுக்கவிருப்பமில்லை. அதனால் இன்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து, எங்களது 2.12 3/4 ஏக்கர் உள்ள ஒரு பூமிக்கு தனிபட்டா வழங்கியதற்கும், 3.39 ஏக்கர் உள்ள மற்றொரு பூமிக்கு தனிபட்டா வழங்க ஏற்பாடு செய்ய தனக்கு தனியாக ரூ.40,000/- லஞ்சமாக பணம் கேட்டு அதில் ரூ.10,000/- ஏற்கனவே கேட்டு பெற்றுக் கொண்டும், மீதி பணம் ரூ.30,000/-த்தில் ரூ.20,000/-த்தை திங்கள் கிழமைக்கு பிறகும், ரூ.10,000/- த்தை பட்டா கிடைத்த பின்பும், தவணை முறையில் கேட்கும் வெள்ளக்கோவில், வீரசோழபுரம் மணியகாரர் அருண்குமார் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd/-xxxx (K.Ramasamy) 31/8/2026. Submitted, Received the above complaint on 31.08.2026 at 16.00 hrs., and made preliminary verification between16.00 hrs., and 17.00 hrs., and after getting approval from DVAC, Chennai, a case was registered in Tiruppur V&AC Cr.No.13/2026/AC/TPR u/s 7 (a) & (b) of Prevention of Corruption (Amendment) Act 2018 on 31.08.2026 at 17.00 hrs. Sd/- xxxx (B.Geethalakshmi) 31/08/2026 Inspr. V&AC, TPR.

Original FIR along with original complaint of Tr.K.Ramasamy, S/o. Kuppananadar, D.No.4/37, Vinayagar Koil Street, Madhapur, Pongalur, Tiruppur District is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Principal District and Sessions Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

31/08/2026

(B.Geethalakshmi),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.